**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 418/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 5 |
| Name : | திரு. பாண்டியன் |
| Father's Name/Husband Name: | திரு. பொன்னுசாமி |
| Village : | ஓலைப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 60/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெங்களூரில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாப்பா, அ.சா.2 தனவேல் ஆகியோரைத் தெரியும். ப.சா.3 சிவபெருமாள், அ.சா.4 மணி ஆகியோரைத் தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும். அ.சா.1 பாப்பா எதிரிகள் மீது நிலப்பிரச்சனை சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார். வழக்கு சம்பவம் நடந்து சுமார் 6 வருடங்கள் இருக்கும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு மாலை சுமார் 6 மணியளவில் சம்பவம் நடந்த இடத்திற்கு வடக்கே உள்ள கொல்லையில் நான் இருந்தேன். அ.சா.1 எதற்காக போலிசில் புகார் கொடுத்துள்ளார் என்ற விபரம் தெரியாது. சம்பவம் சமயத்தில் நான் எனது கொல்லையில் இருந்தேன். அ.சா.1, அ.சா.2 க்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரணையின்போது தற்போது கூறியது போல் தான் கூறினேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் அனைவரும் எனது பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள். பழக்கமானவர்கள். போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 22.08.2019 அன்று மாலை 6.30 மணியளவில் நானும் சாட்சிகள் சிவபெருமாள், மணி ஆகியோர் சுந்தரவேலு காட்டிற்கு அருகே வேலை செய்து கொண்டிருக்கும்போது அ.சா.1 பாப்பாவிற்கும் எதிரி கரும்பாயிரத்திற்கும் வேலி அடைப்பது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றும் நாங்கள் சென்று பார்த்தபோது எதிரி கரும்பாயிரம் அ.சா.1யை தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்து உருட்டுக் கட்டையால் அ.சா.1ன் முதுகில் அடித்து முள்ளில் தள்ளிவிட்டார் என்றும் அதை தடுக்க வந்த அ.சா.2 தனவேலை எதிரி கரும்பாயிரம் கட்டையால் இடுப்பில் அடித்தார் என்றும் எதிரிகள் முருகனும் அஞ்சலையும் அ.சா.1, அ.சா.2 யை தகாத வார்த்தைகளால் பேசி கையாலும், காலாலும் அடித்து உதைத்தனர் என்றும் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்து விலக்கிவிட்டேன் என்றும் அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.